# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1956/17 - 2016 මාර්තු මස 01 වැනි අඟහරුවාදා - 2016.03.01

*1956/17 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சுங்க அறிவித்தல்

சுங்கக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235)

**2003 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, சுங்க (திருத்தச்) சட்டத்தின் “உ” அட்டவணையின் 10 ஆம் உறுப்புரையின் கீழான கட்டளை**

2003 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, சுங்க (திருத்தச்) சட்டத்தின் “உ” அட்டவணையின் 10 ஆம் உறுப்புரையின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், இக்கட்டளை மூலம் பொருள் இயைபு முறைக்குறியீட்டு தலைப்பு இலக்கங்கள் 87.02, 87.03, 87.04, 87.05 மற்றும் 87.11 ஆகியவற்றின் கீழ் குறிப்பிடப்படும் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் சுங்கப் பெறுமதிக் (விலை) கணிப்பீடானது கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன் வாகனங்கள் இறக்குமதி செய்யப்படுகின்ற போது செலுத்தப்படவேண்டிய அனைத்து சுங்கத்தீர்வைகள் மற்றும் வரிகள் என்பன குறித்த சுங்கப் பெறுமதி அடிப்படையில் கணிக்கப்படுதல் வேண்டும் எனவும் பிரகடனப்படுத்துகின்றேன். இந்த கட்டளையானது, 2016, மாச்சு மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பயன்வலுப் பெறுவதுடன் மறு அறிவித்தல் வரை தொடர்ந்து அமுலில் இருக்கும்.

**மோட்டார் வாகனங்களுக்கான பெறுமதி (விலை) கணிப்பீடு செய்தல்**

87.02, 87.03, 87.04, 87.05 மற்றும் 87.11 இயைபு முறைக் குறியீட்டுத் தலைப்புகளின் கீழ்வரும் புதிய மோட்டார் வாகனத்தின் சுங்கப் பெறுமதி பின்வரும் (i), (ii), (iii) மற்றும் (iv) ஆகிய விடயங்களின் கூட்டுத் தொகையாக இருத்தல் வேண்டும்.

(i) கீழே (அ) மற்றும் (ஆ) என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியில் ஆகக் கூடிய பெறுமதி ;

(அ) அத்தகைய வாகன தயாரிப்பாளரினால் கொடுக்கப்படும் விலையின் அடிப்படையில் சுங்கப் பணிப்பாளர் நாயகம் அவர்களினால் தீர்மானிக்கப்படும் சுங்கப் பெறுமதி ;

(ஆ) வாகனம் கப்பல் தளத்திற்கு ஏற்றப்படும் (FOB Value) வரையிலான பட்டியலிடப்பட்ட பெறுமதி.

(ii) இலங்கைத் துறைமுகத்திற்கு எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்துச் செலவு ;

(iii) ஏற்றல், இறக்கல் மற்றும் கையாளுதலோடு இணைந்த இலங்கைத் துறைமுகத்திற்கு எடுத்துச் செல்வதற்கான செலவு;

(iv) இலங்கைத் துறைமுகத்திற்கு எடுத்துச் செல்வதற்கான காப்புறுதிச் செலவு.

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*2003 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, சுங்க (திருத்தச்) சட்டத்தின் அட்டவணை "உ" இன் 10 ஆம் உறுப்புரையின் கீழ் வெளியிடப்பட்ட 2015, செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதிய 1933/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2015, ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதிய 1937/3 ஆம் இலக்க அரச வர்த்தமானி அறிவித்தல் என்பன 2016, மாச்சு மாதம் 01 ஆந் திகதியுடன் இத்தால் முடிவுறுத்தப்படுகின்றது. எவ்வாறாயினும், 2015, ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ தாபிக்கப்பட்டு பின்னர் திருத்தப்படாத கடன் கடிதத்தினை (கடிதங்களை) அடியொற்றி இறக்குமதி செய்யப்படுகின்ற வாகனங்களின் சுங்கப் பெறுமதியினைக் கணிக்கப்படுவதன் பொருட்டு 2015, பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதிய 1901/3 ஆம் இலக்க அரச வர்த்தமானி அறிவித்தல் தொடர்ந்தும் பயன்வலுப் பெறுதல் மற்றும் ஏற்புடையதாதல் வேண்டும் எனவும் கருதப்பட்டு பிரயோகிக்கப்படல் வேண்டும்.*

*ரவி கருணாநாயக்க,*
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2016, மாச்சு 01.*

*3-553*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.